**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**C.C. No. 44/2019.**

**வழக்கு சாட்சி – அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல். | ஜாதி | |
| தந்தை பெயர் | சன்னாசி. | தொழில் | விவசாயம். |
| கிராமம் | கெப்புரெங்கன்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 57/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2025.

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழான மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது, கெப்புரெங்கன்பட்டியில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 2016-ம் வருடம் ஒருநாள் பகல் 03.00 மணியைப்போல் கெப்புரெங்கன்பட்டியில் மங்கம்மாள் சாலைக்கு வடக்குப் பக்கம் ரெங்கசாமி வாத்தியார் என்பவருக்கும், பாண்டி என்பவருக்கும் ஏற்பட்ட சண்டை சம்பந்தமாக போலிசார் வந்து படம் வரைந்தார்கள். அதில் சாட்சியாக நானும், என்னுடன் ராஜாராம் என்பவரும் கையெழுத்துச் செய்தோம். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை –</u>**

1) புகார்தாரர் எனக்கு மாமா உறவு வேண்டும். எனது மனைவியின் பெயர் வசந்தி என்றால் சரிதான். எனது மனைவி வசந்தி புகார்தாரரின்

மகளாவார். மணியம்மாள் எனக்கு அத்தை உறவுமுறை வேண்டும். மணியம்மாள் என் உடன் பிறந்த நபர் அல்ல. மணியம்மாள் என் மாமியார் என்றால் சரிதான். என் அப்பா பெயர் சன்னாசி. மணியம்மாளின் அப்பா பெயர் தெரியாது. மாமியாரின் அப்பா பெயர் தெரியாது. மணியம்மாள் என் அக்கா என்பதை மறைத்துப் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) என் அப்பா சன்னாசிக்கு, மணியம்மாள், சந்திரன், ஜோதி, போஜன், லெட்சுமி மற்றும் நான் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவோம். பாண்டிக்கும், என் மாமனாருக்கும் நிலத்தை பரிவர்த்தனை செய்வது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரிகள் மீது எதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்குத் தெரியாது. எந்த சர்வே நம்பருக்கு பிரச்சனை என்றால் அதுவும் தெரியாது. நானும், ராஜா என்பவரும் மகசரில் கையெழுதிட்டோம். ராஜா என்பவர் என் அக்கா மணியம்மாளின் மகன் ஆவார்.

3) போலிசார் எனது முன்பு தான் படம் வரைந்தார்கள். 2 போலிசார் சம்பவயிடத்திற்கு வந்திருந்தார்கள். நான், படம் வரைந்ததில்தான் கையெழுத்துப்போட்டேன். எழுதியதில் கையெழுத்துப் போடவில்லை. 2016 ம் ஆண்டு போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தேதி, மாதம் ஞாபகமில்லை. புகார்தாரர் என் மாமனார் என்பதாலும், போலிசார் கேட்டுக்கொண்டதாலும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.